உ
கடவுள் துணை



# திருக்குறள் மணிகள்

## பொருட்பால்

வெளியிடுவோர் ;
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலக உரிமையாளர்
சிவநெறிப்புரவலர், சமாதான நீதவான்
க. கனகராசா அவர்கள்

உ

கடவுள் துணை

# திருக்குறள் மணிகள்

## பொருட்பால்

அங்கவியல் (64—95) அதிகாரங்கள்

ஒழிபியல் (96—108) அதிகாரங்கள்

— வெளியிடுவோர் —

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலக உரிமையாளர்

சிவநெறிப்புரவலர், சமாதான நீதவான்

க. கனகராசா அவர்கள்

உ

தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்

அருளிய




# திருக்குறள் மணிகள்

உ

கடவுள் துணை

# திருக்குறள் விளக்கம்

முந்திய ஆண்டான 1975 இல் திருக்குறள் அறத்துப்பாலில் உள்ள முப்பத்தெட்டு அதிகாரங்களில் ஒவ்வொரு குறளைத் திரட்டிப் பொழிப்புரையுடன் தந்தையார் நினைவாக வெளியிட்டோம். அவ்வாறே சென்ற ஆண்டான 1976 இல் பொருட்பாலில் உள்ள முதற்பகுதியாய அரசியலிலிருந்து அதிகாரத்துக்கு ஒன்ருக இருபத்தைந்து குறள் மணிகளைப் பொழிப்புரையுடன் வெளியிட்டோம். இவ்வாண்டும் வழமை போல் தந்தையார் நினைவாகப் பொருட்பாலின் அங்கவியலில் இருந்தும் ஒழிபியலில் இருந்தும் குறள் மணிகளைப் பொழிப்புரையுடன் வெளியிடுகிருேம். மாணவ மாணவிகள் இவற்றைப் படித்துப் பயன் பெறுவார்களாக. இவற்றை வழமை போலத் தயாரித்துத் தந்த திரு. க. சி. குலரத்தினம் அவர்களுக்கு நன்றி.

''திருஆலவாய்''
யாழ்ப்பாணம். 22-3-77

க. கனகராசா ஜே. பி.

உ

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம் நிறுவியவரான

அமரர் வீ. மு. கந்தையா அவர்கள்

## நினைவு வெளியீடு



தோற்றம்: 21-12-1901 மறைவு: 11-4-1959

# திருக்குறள் புகழ்மாலை

நல்ல கருத்துக்கள் இங்குமங்கும் சிதறுண்டு கிடத்தலால் உலகம் தடுமாறுதலைத் திருவள்ளுவர் கண்டார். இவைதாம் மெய்ப்பொருள்கள் என்று வேறு பிரித்துத் தொகுத்து, பொருந்த வகைப்படுத்தி, விரிவாகவும் விளக்கமாகவும் அளவான சொற்களால் ஒரே நூலாக அருளிச்செய்தார். இப்படி சொல்லவல்லவர், சொல்லிய வல்லவர், வள்ளுவர் அல்லாமல் வேறு யார் இருக்கின்றனர்!

பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறும் சேரச் – சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்.

– அரசில் கிழார்

# திருக்குறள்
# பொருட்பால்
## அங்கவியல்

### 64. அமைச்சு

மந்திரியினது தன்மை

அறன் அறிந்(து) ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்
திறன் அறிந்தான் தேர்ச்சித் துணை.

'அரசநீதியை நன்கறிந்து, கல்வியறிவால் நிறைந்து, தொழில் செய்யும் வகையைத் தெரிந்தவனே மந்திரியாவான்.

### 65. சொல்வன்மை

சொற்களைத் திறமையாகச் சொல்லும் ஆற்றல்

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

சொல்லும்போது கேட்டவரைத் தன்வயப்படுத்தும் (வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன் தருதல் முதலிய) பண்புகளுடன் கேட்காதவரும் கேட்க விரும்புமாறு கூறப்படுவது சொல் வன்மையாகும்.

## 66. வினைத்தூய்மை

செய்யுஞ் செயல்கள் குற்றமில்லாமல் நல்லவையாதல்

ஈன்றாள் பசிகாண்பா ளாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

தன்னைப் பெற்ற தாயின் பசியைக் கண்டு தான் வருந்த நேர்ந்தாலும் பெரியவர்கள் பழிப்பதற்குக் காரணமான இழிவுள்ள செயல்களை ஒருவன் செய்தலாகாது.

## 67. வினைத் திட்பம்

தொழில் முடிப்பவனுக்கு வேண்டிய மனவுறுதி

எனைத் திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு.

வேறு எவ்வித உறுதி உடையவராயினும், தொழில் வலிமையை விரும்பாத மந்திரிமாரை உலகத்தவர் மதிக்கமாட்டார்.

## 68. வினை செயல்வகை

மனவுறுதியுடைய மந்திரி தொழில் செய்யுந் திறமை

செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளங் கொளல்.

தொழில் செய்யுமிடத்து, அதனை முன்பு செய்து அநுபவத்தால் கைதேர்ந்தவரின் கருத்தை அறிந்து செய்தல் வேண்டும்.

## 69. தூது

வேற்று நாடுகளில் தூது செல்வாரின் தன்மை

தொகச் சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது.

வேற்று நாட்டுத் தலைவர் விரும்பாத சொற்களை விலக்கிச் சுருக்கமாக அவர் மனம் மகிழும் வண்ணம் செய்தி கூறுபவனே அரசுக்கு நன்மை உண்டாக்கும் தூதுவனவன்.

## 70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல்

மந்திரிகள் நாட்டின் தலைவரைச் சேர்ந்து நடக்கும் முறை

அகலா(து) அணுகாது தீக்காய்வார் போல்க
விகல் வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

அரசிடம் சார்ந்து வாழ்கின்றவர், அதனை மிக நீங்காமலும், மிக அணுகாமலும் நெருப்பில் குளிர் காய்கின்றவர் போல இருத்தல் வேண்டும்.

## 71. குறிப்பறிதல்

அரசின் தலைவர் மனக்குறிப்பை அவர் கூறுமலே அறிதல்

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

தன்னையடுத்த பொருளினைத் தன்னிடம் காட்டுகின்ற பளிங்கு போல, ஒருவனுடைய நெஞ்சில் மிகுந்துள்ளவற்றை அவனுடைய முகம் காட்டும்.

## 72. அவையறிதல்

சபையில் உள்ளவரின் நிலையை அறிந்து பேசுதல்

புல்அவையுள் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச் சொல்லுவார்.

நல்ல அறிவாளிகளின் சபையில் நல்ல பொருளை நன்கு பதியுமாறு சொல்லும் திறமை உள்ளவர்கள், அறிவில்லாதவர் சபையில் ஒன்றுஞ் சொல்லாதிருத்தல் வேண்டும்.

## 73. அவையஞ்சாமை

சபையிலே அஞ்சாமற் பேசுதல்

கற்றார்முற் கற்ற செலச் சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல்.

கற்றவர் சபையில் தாம் கற்றவைகளை அஞ்சாது கூறி, தாம் கல்லாதவற்றை அவரிடமிருந்து அறிந்துகொள்ள வேண்டும்.

(64—73 அமைச்சியல்)

## 74. நாடு

நாட்டின் அமைப்பு

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

ஒரு நாட்டுக்கு அழகு என்பன நோயின்மையும் செல்வமும் விளைவும் இன்பமும் காவலும் என ஐந்தாம்.

## 75. அரண்

நாட்டுக்குப் பாதுகாப்பான காவலின் தன்மை

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண்.

மணிபோலத் தெளிந்த நீரும் வெளியான நிலமும் மலையும் அழகிய நிழலுள்ள காடும் ஆகிய இந்நான்கையும் உடையதே அரணாகும்.

## 76. பொருள் செயல்வகை

செல்வமும் அதனை உண்டாக்கும் வகையும்

அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

நல்ல வழியில் ஒருவர்க்குக் கேடு செய்யாமல் தான் தேடிய பொருள் அறத்தையும் கொடுக்கும், இன்பத்தையுங் கொடுக்கும்.

## 77. படைமாட்சி

### சேனையின் சிறப்பு

மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு.

வீரமும் மானமும் புகழ்பெற்ற நெறியில் நடப்பதும் அரசினல் நம்பப்படும் தன்மையும் ஆகிய நான்கும் படைக்குப் பாதுகாப்பாய குணங்களாம்.

## 78. படைச் செருக்கு

### சேனையின் வீரமிகுதி

பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு.

பகைவரை எதிர்க்கும் வீரத்தை மிக்க ஆண்மை என்று கூறுவர். ஒரு துன்பம் வந்தபோது பகைவர்க்கும் உதவி செய்தலை அந்த ஆண்மையின் கூர்மை என்பர்.

## 79. நட்பு

### சிநேகத்தின் தன்மை

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

அறிவுடையவரின் சிநேகம் வளர்பிறைபோல் நாளுக்கு நாள் வளரும் தன்மை உள்ளது. ஆனால் அறிவிலார் சிநேகம் தேய்மதி போல் நாளுக்கு நாள் குறையும்.

## 80. நட்பாராய்தல்

### சிநேகத்துக்கு உரியவரை ஆராயும் விதம்

குணனுங் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு.

ஒருவனுடைய குணத்தையும் குடிப்பிறப்பையும் குற்றத்தையும் இனத்தாரின் இயல்பையும் அறிந்து அவனோடு நட்புக்கொள்ள வேண்டும்.

## 81. பழைமை

நண்பரிடத்துப் பழைமை பாராட்டுந் தன்மை

அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

பழைமையான நட்பினையுடையவர் தமது நண்பர் கெடுதி செய்தாலும் அவரிடம் அன்பு நீங்கார்.

## 82. தீ நட்பு

தீயகுணமுள்ளவரது சிநேகத் தன்மை

கனவிலும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு

சொல்வது வேறு, செய்வது வேறுயிருப்பவரது நட்பு ஒருவனுக்குக் கனவிலும் துன்பந்தரும்.

## 83. கூடாநட்பு

அகத்தே கூடாது புறத்தே கூடி நடப்பவர் நட்பு

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.

பகைவர் வணங்கித் தொழுதகையுள்ளும் கொலைக் கருவி மறைந்திருக்கும்; பகைவர் அழுது சொரிந்த கண்ணீரும் அத்தன்மையானதே.

## 84. பேதைமை

செய்வன தவிர்வன அறியாரது தன்மை

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

தகாதவற்றுக்கு நாணாமல் இருத்தல், தக்கவற்றை நாடாமல் இருத்தல், அன்பு இல்லாமை, நன்மை ஒன்றையும் விரும்பாமல் இருத்தல் ஆகியவை பேதையின் செயல்கள்.

## 85. புல்லறிவாண்மை

### அற்பமான அறிவுடைமை

அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி.

தம்மிடத்தில் உள்ள குற்றத்தை அறிந்து நீக்காதபோது, உடம்பில் மறைப்பதற்குரிய பகுதியை மட்டும் ஆடையால் மறைத்தல் புல்லறிவாகும்.

## 86. இகல்

### மன மாறுபாடு

இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

துன்பங்கள் எல்லாவற்றிலும் மிக்க துன்பமாய மாறுபாடு ஒருவனுக்கு இல்லையாயின் அவனுக்கு இன்பங்கள் எல்லாவற்றிலும் மிக்க இன்பம் உண்டாகும்.

## 87. பகைமாட்சி

### பகையினது மாட்சிமை

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது.

பின்னை வருவனவற்றை ஆராயாதும், பயன்படுவன செய்யாதும், பழிகருதாதும், குணமில்லாதும் இருப்பவனது பகைமை அவனுடைய பகைவர்களுக்கு இலகுவானதாகும்.

## 88. பகைத் திறந்தெரிதல்

### பகையின் திறத்தையும் பகையின் கண் செய்யுந் திறத்தையும் ஆராய்ந்து அறிதல்

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு.

ஒருவன் தொழில் செய்யும் வகையை அறிந்து தன்னைப்பாதுகாத்துக் கொண்டால் பகைவர் செருக்குக் கெடும்.

## 89. உட்பகை

வெளியே பகையில்லாதவன் போல் காட்டி, உள்ளே பகைத்து நடப்பவரின் தன்மை

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

வாளைப் போல வெளிப்படையான பகைவர்க்கு அஞ்சவேண்டியதில்லை. ஆனால் உறவினர் போல இருந்து உட்பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்.

## 90. பெரியாரைப் பிழையாமை

பெரியாரை அவமதித்து நடவாமை

எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத் தொழுகு வார்.

தீயால் சுடப்பட்டாலும் ஒருசமயம் உயிர் பிழைத்து வாழ முடியும். ஆனால் பெரியாரிடத்தில் தவறு செய்தவர் தப்பிப் பிழைக்க முடியாது.

## 91. பெண்வழிச் சேறல்

தன்வழியே நடக்க வேண்டியவளாகிய மனையாள்
வழியே தான் நடந்து கொள்ளல்

மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று.

தன் மனைவிக்கு அஞ்சி நடக்கின்ற மறுமைப் பயன் இல்லாத ஒருவன், செயல் ஆற்றுந்தன்மை பெருமை பெற்று விளங்கமுடியாது.

## 92. வரைவின் மகளிர்

கட்டுப்பாடு இல்லாத விலைமகளிரது தன்மை

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

விலைமகளிரும், கள்ளும், சூதும் இலக்குமியால் கைவிடப்பட்டவர்க்கு நட்புப் பொருள்களாம்.

## 93. கள்ளுண்ணாமை

### கள்ளைக் குடியாதிருத்தலின் சிறப்பு

உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார்.

கள்ளை விரும்பி வாழ்பவர் எக்காலத்திலும் பகைவரால் அஞ்சப் படார். தமக்கு உள்ள புகழையும் இழந்துவிடுவர்.

## 94. சூது

### சூதாட்டத்தின் தீமை

உடை செல்வம் ஊண்ஒளி கல்வியென்றைந்தும்
அடையாவாம் ஆயங் கொளின்.

சூதாட்டத்தை ஒருவன் மேற்கொண்டால் உணவு, உடை, பொருள், புகழ், கல்வி என்னும் ஐந்தும் அவனைச் சேராவாம்.

## 95. மருந்து

உடல் நோயுறுது காக்கும் மருந்தின் திறம்
மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று.

ஒருவனுக்கு வாத பித்த சிலேத்துமம் ஆகிய மூன்றும் அவை உடலில் நிற்கும் நிலையில் மீறினும் குறையினும் நோயை உண்டாக்கும்

அங்கவியல் முற்றிற்று.

★

# திருக்குறள் - பொருட்பால் - ஒழிபியல்

அரசியலிலும் அங்கவியலிலும் அடங்கா தொழிந்தவை

ஒ ழி பி ய ல்

## 96. குடிமை

உயர்ந்த குடியிற் பிறந்தவரது தன்மை

நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு.

மெய்யான நற்குடியிற் பிறந்தவர்களுக்கு முகமலர்ச்சியும், கொடையும், இன்சொல்லும், பிறரை இகழாமையுமாகிய நான்கும் இயல்பாக உரியன என்று பெரியோர் கூறுவர்.

## 97. மானம்

தம் நிலையில் தாழாமையும், தாழ்வு வரின் உயிர் வாழாமையும் செய்தற்குரிய குணம்

தலையின் இழிந்த மயிர் அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.

நற்குடியிற் பிறந்த மக்கள் தமது உயர்ந்த தன்மையில் நீங்கி இழிவுற்ற காலத்தில், தலையை விட்டு நீங்கிய மயிரினைப் போன்று இகழப்படுவர்.

## 98. பெருமை

### பெரியாரது தன்மை

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு.

கற்புடைய பெண்களைப் போல, பெருமைக் குணமும் தன்னைத் தானே பாதுகாத்து நடப்பவனிடம் உண்டாகும்.

## 99. சான்றாண்மை

பல குணங்களாலும் நிறைந்து அவற்றை ஆளுந்தன்மை

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்.

அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை. என்னும் ஐந்து பண்புகளும் சால்பு என்பதைத் தாங்கியுள்ள தூண்களாகும்.

## 100. பண்புடைமை

உலகியல் தெரிந்து அதற்கு ஏற்றவாறு நடத்தல்

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்ல பண்பை உலகத்தார் போற்றிக்கொண்டாடுவர்.

## 101. நன்றியிற் செல்வம்

தனக்கும் பிறர்க்கும் பயன்படாத செல்வத்தின் இயல்பு

நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று.

பிறர்க்கு உதவாத காரணத்தால் ஒருவராலும் விரும்பப்படாதவனுடைய செல்வம், ஊர் நடுவில் நச்சுமரம் பழுத்தாற் போன்றது.

## 102. நாணுடைமை

தகாத செயல்களில் நாணுந் தன்மை

பிறர்பழியும் தம்பழிபோல் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு.

பிறர்க்கு உண்டாகும் பழியையும் தமக்கு வரும் பழியாகக் கருதி நாணுபவரே நாணத்திற்கு இருப்பிடமாவர்.

## 103. குடிசெயல்வகை

தான் பிறந்த குடியை உயரச்செய்யும் விதம்

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

குற்றம் இல்லாதவனாய்க் குடிஉயர்வதற்கான செயல் செய்து வாழ்கின்றவனை உலகத்தார் சுற்றமாக விரும்பிச் சூழ்ந்து கொள்வர்.

## 104. உழவு

குடி உயர்தற்கு ஏதுவாய உழுதல் தொழிலின் திறம்

இரவார் இரப்பார்க்கு ஒன்று ஈவர் கரவாது
கைசெய் தூண் மாலை யவர்.

கையால் தொழில் செய்து உணவு தேடி உண்ணும் இயல்புடையவர், பிறரிடம் சென்று இரக்கமாட்டார். தம்மிடம் இரந்தவருக்கு இல்லை என்னுமல் தாம் கொடுப்பார்.

## 105. நல்குரவு

அனுபவிக்கப்படும் பொருள் ஒன்றும் இல்லாமை
தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குரவு என்னும் நசை.

வறுமை என்று சொல்லப்படும் ஆசை நிலை ஒருவனைப் பற்றினுல் அவனுடைய பழைமையான குடிப்பண்பையும் புகழையும் ஒருசேரக் கெடுத்துவிடும்.

## 106. இரவு

பிறரிடம் சென்று யாசித்தல்

இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயும் சாலும் கரி.

இரப்பவன் எவரிடத்திலும் சினம் கொள்ளாதிருத்தல் வேண்டும்; அவன் அடைந்துள்ள வறுமைத் துன்பமே அவனுக்கு அறிவு புகட்டும் சான்ருக அமையும்.

## 107. இரவச்சம்

யாசித்தலால் வரும் அவமானத்திற்கு அஞ்சுதல்

ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந் ததுஇல்.

பசுவிற்குத் தண்ணீர் வேண்டுமென்று இரந்தாலும், அந்த இரப்புச் சொல் நாவினுக்கு இழிவைத் தருவதுபோல வேறொன்றுந் தருவதில்லை.

## 108. கயமை

நற்குணமில்லாத கீழோரது தன்மை

உடுப்ப தூஉம் உண்ப தூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்.

கீழ்மகன் பிறர் உடுப்பதையும் உண்பதையும் கண்டால் அவர் மேல் பொறாமை கொண்டு, வேண்டும் என்றே குற்றம் காண வல்லவனாவான்.

ஒழிபியல் முற்றிற்று.

பொருட்பால் முற்றிற்று.

---

தயாரித்தவர்; க. சி. குலரத்தினம்

மக்களுக்கு மாநிலத்தில் வாழ்க்கை வழிகளெல்லாம்
சிக்கலறக் காட்டி நலம் செய்நூலாம் — மிக்கபுகழ்ச்
செந்தமிழ்ச் செல்வத் திருக்குறளை நெஞ்சமே
சிந்தனை செய்வாய் தினம்.

— கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை

---

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்.

*Reading makes a perfect man.*

---

இப் புத்தகத்தை வாசித்தபின்னர்
பிறருக்குங் கொடுத்து
உதவுங்கள்.

★ மில்க்வைற் பொன்விழா ஆண்டு
1927 — 1977

★ மில்க்வைற் தாபனத்தின் தரமான தயாரிப்புகளுக்கு உங்கள் அமோக ஆதரவு பெருக எங்கள் அறப்பணி பெருகும்.

★ ஐம்பது ஆண்டுகள் உங்கள் ஆதரவு எங்களுக்கு அளப்பரிய வரப்பிரசாதம்.

நன்றி!

# மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7233 தந்தி: "மில்க்வைற்"
கிளை : 79, மெசென்ஜர் வீதி, கொழும்பு-12.
தொலைபேசி: 36063

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம். 22-3-77.